DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI

Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.

Judicial Magistrate, Manapparai

Date: 04.02.2026

CC No.304/2025

சாட்சி : PW1

| | |
|---|---|
| பெயர் : திரு. நாகராஜ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அழகர் | தொழில் : வெல்டர் |
| கிராமம் : அலங்கம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 30/2026 |

( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். விபத்து நடந்த இடத்தில் எதிரியை பார்த்தேன். 21.09.2023 அன்று பகல் 11.30 மணியளவில் எனது மாமனார் செல்வம் மற்றும் அய்யாக்கன்னு TN 32 Z 0063 HERO HONDA CD 100 இருசக்கரவாகனத்தில் மணப்பாறை – துவரங்குறிச்சி ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள். வண்டியை அய்யாக்கன்னு ஓட்டினார். பிள்ளையார்கோவில்பட்டி அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் இருந்து அதே திசையில் வந்த ஈச்சர் வேன் TN 36 M 7167 என்ற வாகனம் அதிவேமாகவும், கவனக்குறைவாகவும் வந்து முன்னால் சென்ற அய்யாக்கன்னு ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய நபர் ஆவார். அவரது பெயர் செந்தில்குமார், தோகமலையை சேர்ந்தவர். நானும், எனது பெரிய மாமனார் அண்ணாத்துரையும் சுமார் 10 மீ தூரத்திலிருந்து விபத்தை பார்த்தோம். அந்த விபத்தில் எனது மாமனாருக்கு வலது பக்க முகத்திலும், வலது கால் முட்டி, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் மற்றும் உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. அய்யாக்கன்னுக்கு வலது கை முட்டியில் காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி வரச்சொன்னேன். ஆம்புலன்ஸில் வந்தவர்கள் எனது மாமனார் சம்பவ இடத்திலியே இறந்துவிட்டதாக சொன்னார்கள். அய்யாக்கன்னுவை மட்டும்

ஏற்றிகொண்டு மணப்பாறை அரசு மருத்துவமனை சென்றார்கள். அதன்பின்னர் எனது மாமனார் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன்பின்னர் நான் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.